# உங்கள் பிள்ளை மொழி பயில்வதற்கு உதவுங்கள்

# உங்கள் குழந்தைக்கும் இளம் பிள்ளைக்கும் வாசித்துக்காட்டுங்கள்

## குடும்ப கல்வித்தகமை

வாசித்தல், எழுதுதல், அவதானித்தல், உரையாடுதல் என்பவை குடும்பங்கள் ஒருங்கிணைந்து செய்பவையாகும்

**வாசித்தல்/ கற்பனை செய்தல்/ படித்தல் (LIR) -** மொன்றியல் சிறுவர் வைத்தியசாலையும் கல்வி அபிவிருத்தி நிலையமும் ஒருங்கிணைந்து, பிள்ளைகளின் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் உள்ள தொடர்பை வலியுறுத்தி கல்வியை ஊக்குவிக்கும் ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளார்கள். இது வைத்தியசாலையின் குடும்ப நலத்திட்டத்துடன் தொடர்புள்ளது.



**0–2 வயதுக்குழந்கைகளுக்கு**

### குழந்தைக்கு வாசித்துக்காட்டுவதன் நோக்கமென்ன?

வாசித்துக்காட்டுவது குழந்தைகளின் கேள்வித் திறமையையும், ஞாபக சக்தியையும் ஊக்குவிக்குமென ஆராய்வுகள் தெரிவிக்கின்றன. ஆரம்பத்தில் நீங்கள் வாசிக்கும் எதையும் குழந்தைகள் விளங்கிக்கொள்ளமாட்டார்கள். இருந்தாலும் மிகச்சிறிய குழந்தையாயினும் வாசித்துக்காட்டுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

வாசித்துக்காட்டுவது, ஒரு கதையை படங்கள் உருவங்கள் வசனங்கள் மூலமாக குழந்தைகளுக்குபுரியவைப்பது அவர்களுடைய மூளை வளர்ச்சியையும் மொழித்திறமையையும் தூண்டுகிறது. வாசிப்பது சுகாதாரமான வாழ்க்கையின் ஒரு அங்கமாகும். அதற்கும் மேலாக உங்கள் மடியிலிருந்துகொண்டு உங்கள் குரலைக் கேட்பதன் மூலம் அவர்கள் தங்களை புத்தகங்களுடன் ஒருங்கிணைத்துக்கொள்கிறார்கள்.

### குழந்தைகள் புத்தகங்களுடன் என்ன செய்யலாம்?

- 4–6 மாதங்களில் குழந்தைகள் தலையை நிமிர்த்தி, கூடிய விளக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள்
- 6–12 மாதங்களில் குழந்தைகள் நிமிர்ந்து உட்கார்ந்து தாங்களும் எல்லாவற்றிலும் பங்குபற்ற விரும்புவார்கள். உங்களை சுற்றியுள்ள பொருட்களை புத்தகத்தில் சுட்டிக்காட்டுங்கள்
- 12–24 மாதங்களில் ஒரு புத்தகத்தை தெரிவு செய்து அதை வாசித்துக்கேட்க விரும்புவார்கள். வாசித்துக்காட்டும்போது நிலத்தில் அல்லது கட்டிலில் புரண்டு கொள்ளவோ, ஓடித்திரியவோ விரும்புவார்கள்.

### உங்கள் குழந்தையுடன் வாசிப்பது எப்படி?

- உங்களையும் புத்தகத்தையும் பார்க்கக்கூடிய விதத்தில் குழந்தையை வைத்திருங்கள்.
- மட்டையால் அல்லது துணியால் செய்த அதிக பக்கங்கள் இல்லாத புத்தகம் ஒன்றை தெரியுங்கள்
- குழந்தைக்கு வாசிக்கும்போது பல்வேறு முக பாவனைகளுடன் சங்கீதக்குரலில்,வீத்தியாசமான மிருகங்களுக்கும் கதாபாத்திரங்களுக்கும் வெவ்வேறு குரலில் படித்துக்காட்டுங்கள். ஆனால் செல்லக்குரலை தவிருங்கள்
- புத்தகத்தை குழந்தை தனது வாய்க்குள் வைக்க ஊக்குவித்து, பல்வேறு குரல்களில் சத்தமிட்டு, புத்தக பக்கங்களை புரட்டுவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- கண்ணாடி பதித்த புத்தகங்கள், அவர்கள் தொடக்கூடிய பொருட்களை குழந்தைகள் விரும்புவார்கள்.
- நித்திரைக்கு அல்லது குட்டித்தூக்கத்திற்கு முன்பு குழந்தைகளுக்கு வாசிப்பதை ஓவ்வொரு நாளும் வழக்கமாக வைத்திருங்கள்

## குழந்தைகளின் மொழி அறிவை ஊக்கப்படுத்தும் வேறு வழிகள்

- வீட்டில் குழந்தைகளுடைய புத்தகங்களுக்கு ஒரு நூலகத்தை உருவாக்குங்கள்

- பிள்ளைகளை உடுத்தும்போது, உணவு தயாரிக்கும்போது அல்லது கடைக்குப்போகும் போது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.பாட்டுப்பாடி மகிழுங்கள்
- உங்கள் பகுதியிலுள்ள நூலகத்தில் அங்கத் தவராகுங்கள். அநேகமான நூலகங்கள் கதை சொல்லும் நேரம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை பெற்றோர் பிள்ளைகளுக்காக ஒழுங்கு செய்கிறார்கள்
- நீங்கள் உங்களுக்காக புத்தகங்களை வாசிப் பதன் மூலம் எவ்வளவு தூரம் புத்தகம் வாசிப்ப தில் உங்களுக்கு ஆர்வம் இருககிறது என்பதை பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள்
- தொலைக்காட்சி மற்றும் பல்வேறு ஊடகங்களை மட்டுப்படுத்துங்கள்.

**குழந்தைகளுக்கு வாசிப்பது பற்றிய மேலதிக விவரங்களுக்கு**

**Sharing books with your Baby**
http://www.literacytrust.org.uk/assets/0000/0301/bookstamil.pdf

**LIR பற்றிய மேலதிக விவரங்களுக்கு**

www.thechildren.com/en/patients/lire-imagine-read-project

imagine LIRE READ
Projet d'alphabétisation HME
MCH Literacy Project

Hôpital de Montréal pour enfants
Centre universitaire de santé McGill
Montreal Children's Hospital
McGill University Health Centre